SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருப்பாண்டிப் பதிகம்**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற்கு ஆரமுதாம்
ஒருவரை ஒன்றும் இலாதவரைக்
கழல் போது இறைஞ்சித்
தெரிவர நின்று உருக்கிப்
பரிமேற் கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவுஅறியாது
என்தன் உள்ளம்அதே.

சதுரை மறந்து அறிமால் கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு
மேல் குடிகேடு கண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்பு
ஓட மறித்திடுமே.

நீர்இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

பார்இன்ப வெள்ளங் கொளப்
பரிமேற் கொண்ட பாண்டியனார்
ஓர்இன்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை உள்ளம் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துள் பெய்கழலே
சென்று பேணுமினே.

செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் தென்னன் நன்னாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம்
இக்காலம் எக்காலத்துள்ளும்
அறிவுஒண் கதிர்வாள் உறைகழித்து
ஆனந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இருநிலத்தே.

காலம் உண்டாகவே காதல்செய்து
உய்மின் கருதுஅரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
வானவர் நண்அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே.

ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள் செய்கின்ற
முத்திப் பரிசுஇதுவே.

மாயவனப் பரிமேல் கொண்டு
மற்றுஅவர் கைக்கொளலும்
போய்அறும் இப்பிறப்பு என்னும்
பகைகள் புகுந்தவருக்கு

ஆய அரும்பெருஞ் சீருடைத்
தன்அருளே அருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே.

அழிவுஇன்றி நின்றதுஓர் ஆனந்த
வெள்ளத்திடை அழுத்திக்
கழிவுஇல் கருணையைக் காட்டிக்
கடிய வினைஅகற்றிப்
பழமலம் பற்றுஅறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுஉலகும் தருவான் கொடையே
சென்று முந்துமினே.

விரவிய தீவினை மேலைப்
பிறப்பு முந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்புஉருக்கும்
பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்தி
கொளப்பட்ட பூங்கொடியார்
மரஇயன் மேல்கொண்டு தம்மையும்
தாம்அறியார் மறந்தே.

கூற்றை வென்று ஆங்குஐவர் கோக்களையும்
வென்று இருந்த அழகால்
வீற்றிருந்தான் பெருந்தேவியும்
தானும்ஓர் மீனவன்பால்
ஏற்று வந்து ஆர்உயிர் உண்ட
திறல் ஒற்றைச் சேவகனே
தேற்றம் இலாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *